**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | |
|---|---|
| Case No. | : CC No. 157/2016 |
| Deposition of witness for Prosecution | : P.W– 5 |
| Name | : பவுன்ராஜ், வயது 57 |
| Father Name/Husband Name | : பிரான்சிஸ் |
| Village | : திருவெற்றியூர் |
| Taluk | : திருவெற்றியூர் |
| Calling | : உதவி ஆணையாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of July 2026.

**(A1 present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது திருவெற்றியூர் சரகம் காவல் உதவி ஆணையாளராக பணியில் உள்ளேன். கடந்த 20.12.2014 ஆம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் பதிவு செய்த குற்ற எண். 1280/2014, இ.த.ச பிரிவுகள் 420, 506(1) வழக்கை தலைமை காவலர் வீர தேவ ஜாட்டி என்பவர் வழக்கு பதிவு செய்து வைத்ததை அப்போதிருந்த குற்ற பிரிவு ஆய்வாளர் விஜயகுமார் என்பவர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், வரைப்படம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2 இவ்வழக்கினை சொத்தை 11.12.2014 ஆம் தேதி 16.00 மணிக்கு வாதி காளீஸ்வரி என்பவரிடமிருந்து பெரிய பித்தளை பானையில் கொஞ்சம் மணலுடன் மஞ்சள் கலர் துணியால் சுற்றப்பட்ட பானை ஒன்றையும், சிறிய பித்தளை பானையில் கொஞ்சம் மணலுடன் சிவப்பு கலர் துணியால் சுற்றப்பட்ட பானை ஒன்றையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **(அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், பெரிய பித்தளை பானையில் கொஞ்சம் மணலுடன் மஞ்சள் கலர் துணியால் சுற்றப்பட்ட பானை ஒன்று**

**அ.சா.பொ.1 ஆகவும், சிறிய பித்தளை பானையில் கொஞ்சம் மணலுடன் சிவப்பு கலர் துணியால் சுற்றப்பட்ட பானை ஒன்று அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3 பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் காளீஸ்வரி, கருப்பசாமி, முருகபெருமாள், கருப்பசாமி, சுடலைமணி, தலைமை காவலர் வீர தேவ ஜாட்டி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் மாறுதல் சென்ற பின்பு 04.07.2015 ஆம் தேதி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணியேற்ற நான் இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்யாத நிலையில் இருந்ததால் எதிரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் இவ்வழக்கில் எதிரி ராஜம் என்பவர் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றிருந்தார். இவ்வழக்கில் சாட்சிகளை முந்தைய உதவி ஆய்வாளர் விசாரிந்திருந்தை நான் மேல் விசாரணை செய்து விசாரித்தபோது அவரிடம் கூறியது போல் என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் விசாரணையை முடித்து 30.06.2016 ஆம் தேதி எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4. அரசு தரப்பு வழக்குப்படி எந்நெந்த தேதிகளில் எந்தெந்த இடத்தில் வைத்து எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2011–2012 காலகட்டங்களில் பணம் கொடுக்கப்பட்டதாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். 2011– 2012 காலகட்டங்களில் அ.சா.1 சாமி அய்யா மற்றும் கரூர் சாமியார் பெயர் குறிப்பிட்டு புகார் கொடுத்ததாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் 2011–2012 காலகட்டங்களில் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் 2013 ஆம் ஆண்டுதான் வழக்கு சம்பவம் நடைபெற்றது.

5. வழக்கு சொத்துக்கள் அ.சா.பொ.1 மற்றும் 2, அ.சா.2 ஆல் 2011 – 12 காலகட்டங்களில் காவல் நிலையத்தில் நேரடியாக கொடுத்ததாக அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறானது, அ.சா.1 11.12.2014 ஆம் தேதி அவருடைய வீட்டிலிருந்து பானைகளை எடுத்துக் கொடுத்தார். 2011 – 2013 காலகட்டத்தில் ரூ. 5 லட்சம் என்பது பெரிய தொகையாக இருக்கும் நிலையில் அதை யாரிடமிருந்து அ.சா.1 பெற்று கொடுத்தார் என்று வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் அ.சா.1 சிறுக சிறுக சேமித்து வைத்த பணம் என்று விசாரணையில் கூறினார்.

6. 2011–2012 காலகட்டத்தில் 1வது எதிரியின் தந்தை சாமி அய்யா கோவில் நிர்வாகம் செய்து வந்தார் என்று வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் 2011–2012 காலகட்டத்தில் வழக்கறிஞர் மூலமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 அவரது சாட்சியத்தில் கரூரில் இருந்து வந்த சிறப்பு சாமியார் பூஜை செய்ததாக வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்காது. மேற்படி கரூர் சாமியாரை கண்டுபிடிக்க இயலாமல் அவரை வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனது புலன் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை.

7. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வேறு நபர்கள் இருந்ததாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 எந்த இடத்தில் வைத்து மிரட்டப்பட்டதாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். வழக்கு ஆவணங்களின் படி ஆய்வாளர் விஜயகுமார் விசாரணை செய்ததாக எங்கும் துலங்காது என்றால் சரியல்ல, சாட்சி பட்டியலில் அவர் சேர்க்கப்படவில்லை ஆனால் சாட்சிகளின் வாக்குமூலத்தில் அவர்தான் கையொப்பம் செய்துள்ளார். வழக்கு ஆவணங்களின் படி ஆய்வாளர் தர்மராஜ் முதல் விசாரணை செய்ததாக துலங்குமா என்றால் துலங்காது.

8. மேற்படி விஜயகுமார் மற்றும் தர்மராஜ் ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், அவர்களை சாட்சியாக சேர்க்காமல் விடுபட்டுள்ளது. 2014 காலகட்டங்களில் அ.சா.1 விடம் பணம் பெற்றதாக அரசு தரப்பு வழக்கு கிடையாது என்றால் சரிதான், 2013 ஆம் ஆண்டில்தான் பணம் பெறப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் பணம் பெற்றதாக சொல்லப்படும் நிலையில் ஒரு வருடங்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இடைப்பட்ட காலகட்டத்தில் அ.சா.1 புகார் கொடுத்ததாக வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். புகார்மனுவில் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

9. புகார்மனுவில் 23.11.2014 ல் அ.சா.1 ASP யிடம் புகார் கொடுத்ததாக அ.சா.1 சொல்லியுள்ள நிலையில் அந்த புகார்மனு என்ன ஆனது என்று வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரிதான். சம்பவத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக சொல்லப்படும் பணத்தை நான் மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் பணத்தை எதிரி செலவழித்து விட்டார். மேற்படி விவரம் வழக்கு ஆவணங்களில் துலங்குமா என்றால் துலங்காது. 1வது எதிரியின் தந்தை சாமி அய்யா மிரட்டல் விடுத்ததாகவும், அது சம்பந்தமாக புகார் கொடுத்ததாகவும் வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1,2 யார் முன்பு பணம் கொடுத்தாகவும் வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான், யார் முன்னிலையிலும் பணம் கொடுக்கப்படவில்லை.

10. அ.சா.1,2 ஆகியோர்கள் கரூரைச் சேர்ந்த சிறப்பு சாமியாரிடம் பணம் கொடுத்தார்கள் என்றும், அந்த சிறப்பு சாமியாரிடமிருந்து பணத்தை மீட்க முடியாது என்று தெரிந்ததால் 1வது எதிரியிடம் மீது கோவில் நிர்வாகத்தின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் எதிரியிடம் பணம் கொடுக்கப்பட்டிருந்தால் கொடுக்கப்பட்ட தொகை மற்றும் தேதி குறித்து வழக்கு ஆவணங்களில் அறுதியிட்டு குறிப்பிடபட்டிருக்கும் என்றால் சரியல்ல.

11. 1வது எதிரி எந்த காலத்திலும் அ.சா.1 விடம் பணம் பெறவில்லை என்றாலும், புதையல் இருப்பதாக 1வது எதிரி அ.சா.1 யை ஏமாற்றியதாக சொல்வது பணத்திற்காக பொய் என்றாலும், 1வது எதிரி கொலைமிரட்டல் விடுத்ததாக சொல்வதும் பொய் என்றாலும் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் அ.சா.1,2 அவர்களது சாட்சியத்தில் எதிரி ராஜம் குறித்து சாட்சியம் அளித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 கூறியது போல் சங்கதிகள் நடைபெறவில்லை என்பதால் வழக்கு ஆவணங்களுக்கும், சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அ.சா.1 ன் வீட்டில் வைத்து கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.